செ. கு. எண்:094 நாள்: 04.07.2017

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் அறிக்கை – 4.7.2017**

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குளப்புறம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜன் என்பவரின் மனைவி திருமதி சஜிதா என்பவர் பிரசவத்திற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 15.3.2017 அன்று தாயும் சேயும் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் வட்டம், கோமுகி அணை அரசு மலைவாழ் உண்டு உறைவிட மேல்நிலை பள்ளியில் 6–ம் வகுப்பு படித்து வந்த, நாரணப்பட்டி கிணத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சௌந்தராஜன் என்பவரின் மகன் செல்வன். அரவிந்தன் என்பவர் 24.6.2017 அன்று கச்சிராப்பாளையம், கோமுதி ஆற்றின் கால்வாயில் குளிக்கச் சென்ற போது, எதிர்பாராத விதமாக தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட துயரச் சம்பவங்களில் உயிரிழந்த திருமதி சஜிதா மற்றும் செல்வன். அரவிந்தன் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிகழ்வில், திருமதி சஜிதா அவர்கள் குடும்பத்தின் வறிய நிலையை கருத்திற் கொண்டு சிறப்பினமாக கருதி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாயும்; செல்வன் அரவிந்தன் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9